# சிறுமைப்பட்ட தேசத்தில்

சிறுமைப்பட்ட தேசத்தில்
தேவன் என்னைப் பலுகப்பண்ணினார்
நான் நிற்பதும் உம் கிருபையல்லவா
நிர்மூலமாகாததும் கிருபையல்லவா

1.மனுஷரை என் தலையின் மேல் ஏறச்செய்தீர்
தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தேன்
செழிப்பான இடத்தில் கொண்டு வந்தீர்
வாக்குத்தத்தம் நிறைவேற்றினீர்---- நான் நிற்பதும்

2.செத்தவனைப் போல் நான் மறக்கப்பட்டேன்
உடைந்த பாத்திரத்தைப் போலானேன்
என் தகப்பன் வீட்டின் வருத்தங்களை மறக்கச் செய்தீர்
சாட்சியாக வாழவைத்தீர்---- நான் நிற்பதும்

3.நான் கருவில் உருவான நாள் முதலே
உம்மால் ஆதரிக்கப்பட்டேனே
என் தாயின் கருவிலிருந்து எடுத்தீரே
எந்நாளும் உம்மைத் துதிப்பேன்---- நான் நிற்பதும்